மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது சப்ஸிடி முறை என்பதல்ல. இது கடன் உதவி மட்டும்தான். லோன் ஸ்கீம். ஆங்காங்குள்ள நிலைமைக்கேற்ப பத்து அல்லது இருபது பேர்கள் சேர்ந்து முயற்சித்தால் கொடுப்பது என்பதாகும். குடும்பக் கட்டுப்பாட்டிற்கு விளம்பரம் செய்வது என்பது மனிதனின் மனம் அடிக்கடி குழம்பிவிடுகிறது. அப்படி இவற்றிக்கு விளம்பரம் தேவையில்லை. தெளிவு இருக்கிறது என்று கருதுகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : சிறு விவசாயிகள் மேம்பாடுத் திட்டத்தின்கீழ் எங்கள் மாவட்டத்தில் ஒரு சில ஏரியாக்கள் எடுக்கப்பட்டு கால்நடை வளர்ப்பிற்கு மத்திய அரசாங்கம் நான்கில் ஒரு பங்கு கடன்கள் கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். பல மனுக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. மாவட்ட கூட்டுறவு வங்கிக்கு ரிசர்வ் வங்கியிலிருந்து இதற்காகக் கடன் வழங்கப்படவில்லை. ஆகவே அங்குள்ளவர்கள் கடன் வாங்கமுடியாமல் இந்த வருஷம் பூராவும் போய்விட்டது. ஆகவே கால்நடை வளர்ப்பிற்காக மானிய உதவி பெறுவதற்கு, கடன் வழங்க சிறுவிவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் குறிக்கோளில் ஒன்று கிராமங்களில் இப்படிப்பட்ட வளர்ச்சித் திட்டங்களுக்கு என்று கடன் உதவி அளிப்பது என்பது. அதில் மானியம் இருக்கிறதா என்று தெரியாது. மானியங்களாக வங்கிகள் தர முடியாது. அத் திட்டத்தில் எந்த விதமான குறைபாடுகள் இருந்தாலும் அதுபற்றி எழுதியனுப்பினால் அது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

* 381 **வினா—திரு. எம். ஏ. லத்தீப் :** மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வடார்க்காடு மாவட்டம், ஆலங்காயம் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட ஜவ்வாது மலைப் பகுதியில் 'ஜெர்சி' போன்ற உயர்ரக கால்நடை அபிவிருத்திப் பண்ணை ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

1972 மார்ச் 9]

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்திலே, ஆலங்காயம் பகுதிகளிலே நல்ல இயற்கை புல்வெளி இருக்கிறது. ஆகவே, கால்நடை வளம் குறைந்து வரும் நிலையில், வளமான கால்நடை உற்பத்திக்கு வழி செய்கிற வகையில் வடாற்காடு மாவட்டத்தில் இப்படிப்பட்ட ஒரு பண்ணையை இனி யாவது ஏற்படுத்த அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கேள்வி செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா என்பது. ஆகவே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை என்று சொன்னேன். இனி யாவது ஆலோசிக்கப்படுமா என்பது துணைக் கேள்வி. எப்போதாவது யோசிக்கப்படும்.

* 382 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to start buffalo farms in the State ; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : விவர அறிக்கை @ ஒன்று சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, ஆந்திரா மாநிலம் பிரிந்ததற்குப் பிறகு, அந்த மாதிரி பண்ணைகள் நம் மாநிலத்தில் இல்லை. அதை ஏற்படுத்துவதற்கு காலதாமதமாவதற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மாநில அரசு இப்படிப்பட்ட மூர்ரா எருமைகளைக் கொண்ட பண்ணையை அமைப்பதற்கு மத்திய அரசுக்கு ஏறத்தாழ 1½–2 ஆண்டுகளுக்கு முன்பே இணக்கம் தெரிவித்தது. மிகத் தீவிரமாக நடவடிக்கை எடுத்து, சென்னைக்குப் பக்கத்திலே உள்ள பண்ணையை எடுத்துக் கொள்ள ஒப்புதல் தந்து இருக்கிறது. மத்திய அரசும் எடுத்துக் கொள்வதாக உறுதியளித்திருக்கிறது. தண்ணீர் கொடுப்பதைப் பற்றி மத்திய அரசு சில பிரச்சினைகளை எழுப்பியது. அதற்கு மாநில அரசும் தெளிவான விளக்கமான பதிலைத் தந்து தண்ணீர் தர ஒப்புக் கொண்டிருக்கிறது. விரைவில் செயல்படும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 132-134-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.